திரு. எஸ். ஆண்டித்தேவர்: அனைத்துக் கட்சிகளுடைய அபிப்பிராயத்தை, மைய அரசுக்கு ஒரு தீர்மான ரூபத்தில் அனுப்பி அதை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிகள் மட்டும் அல்ல, தமிழகத்தின் அனைத்து மக்களுடைய உணர்வாக இதைக் கருதி இந்த உணர்வுகளைக் கண்டிப்பாகப் பிரதிபலிக்க அரசு தக்க நடவடிக்கை ஏற்கனவே எடுத்திருக்கிறது, எடுக்கும்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவை" பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS